## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

OS. No. 19/2010

.....

2026 ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ம் நாள் PW1 என்பவரின் சாட்சியாகிய நபரின் வாக்குமூலம் (1908–ம் ஆண்டின் 3–வது விதியின் படி) திரு.கோதண்டராமன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் = மங்கையர்கரசி விலாசம்

க/பெ. = பழனி

வயது =

மதம் =

தொழில் =

தேதி

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் முதல் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனக்காகவும் 2ம் வாதிக்காவும் வேண்டி சாட்சியம் அளிக்கிறேன். எனது பக்க முதல் விசாரணையை நிரூபண பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். 17.11.1916 தேதியிட்ட பாகப் பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 02.03.1980 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 10.08.1981 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும். 15.07.2009 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு நாங்கள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகும். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ.5 ஆகும். 07.09.2009 மற்றும் 21.08.2009 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ்கள் வா.சா.ஆ.6 வரிசை ஆகும். 01.09.2009 தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும். 17.06.1991 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட

நகல் வா.சா.ஆ.8 ஆகும். 04.11.1991 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகும். 30.11.1992 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகும். 29.04.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகும். என்னுடைய திருமண அழைப்பிதழின் புகைப்பட நகல் வா.சா.ஆ.12 ஆகும். 03.07.2009 தேதியிட்ட என்னுடையாரின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் வா.சா.ஆ.13 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

(1 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு 1 மற்றும் 6 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.